செ.கு.எண்: 240

## மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

## அறிக்கை - 6.12.2011

கரூர் மாவட்டம், தோரணக்கல்பட்டி கிராமம், டி.செல்லாண்டிபாளையத்தில் இயங்கி வரும் தனியாருக்கு சொந்தமான சாயப்பட்டறை நிறுவனத்தில் சாயம் போடுவதற்குப் பயன்படுத்தப்பட்ட பாய்லர் இன்று (6.12.2011) வெடித்துச் சிதறியதில் அப்பட்டறையில் பணி புரிந்து வந்த செல்லாண்டிபாளையம், கரட்டான்காடு கிராமத்தைச் சேர்ந்த திரு. ரெங்கசாமி என்பவரின் மகன் காந்தி, கரூர் கே.வி.பி. நகரைச் சேர்ந்த திரு. சென்னியப்பன் என்பவரின் மகன் பாஸ்கர், பீகார் மாநிலம், பிஜுவா கிராமத்தைச் சேர்ந்த திரு. ஸ்ரீநந்தன் பிரசாத் என்பவரின் மகன் ராம்ஜித் மற்றும் பிகார் மாநிலம் கயாவைச் சேர்ந்த திரு.லஷ்மண் பிரசாந்தின் மகன் திரு, ராஜ்குமார் பிரசாந்த் ஆகிய நால்வரும் உயிரிழந்தனர் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் துயருற்றேன்.

இந்த விபத்தில் அகால மரணமடைந்தவர்களின் குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், இந்த விபத்தில் 20 பேர் காயம் அடைந்துள்ளனர் என்பதை அறிந்து நான் மிகவும் வருத்தமடைந்தேன். மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைப் பெற்று வரும் இவர்கள் அனைவருக்கும் நல்ல முறையில் சிகிச்சை அளிக்க மருத்துவமனை அதிகாரிகளுக்கும், கரூர் மாவட்ட நிருவாகத்திற்கும்

நான் உத்தரவிட்டுள்ளேன். இச்சம்பவத்தில் காயமடைந்துள்ள அனைவரும் விரைவில் பூரண குணமடைய வேண்டும் என்ற என்னுடைய விருப்பத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தத் துயரச் சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பங்கள் ஒவ்வொன்றுக்கும் தலா ஒரு லட்சம் ரூபாயும், பலத்த காயமடைந்தவர்களுக்கு தலா 25,000/- ரூபாயும், சாதாரண காயம் அடைந்தவர்களுக்கு தலா 10,000/- ரூபாயும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

ஜெ ஜெயலலிதா
தமிழக முதலமைச்சர்

வெளியீடு, இயக்குநர்
செய்தி, மக்கள் தொடர்புத் து
சென்னை-9